இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“மிகச் சிறியவற்றில் நம்பத் தகுந்தவர் பெரியவற்றிலும் நம்பத் தகுந்தவராய் இருப்பார். மிகச் சிறியவற்றில் நேர்மையற்றவர் பெரியவற்றிலும் நேர்மையற்றவராய் இருப்பார். நேர்மையற்ற செல்வத்தைக் கையாளுவதில் நீங்கள் நம்பத் தகாதவராய் இருந்தால் யார் உங்களை நம்பி உண்மைச் செல்வத்தை ஒப்படைப்பார்? பிறருக்கு உரியவற்றைக் கையாளுவதில் நீங்கள் நம்பத் தகாதவர்களாய்ப் போனால் உங்களுக்கு உரியவற்றை உங்களுக்குக் கொடுப்பவர் யார்?
எந்த வீட்டு வேலையாளும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது”.
(லூக்கா 16: 10-13)

# உலகில் ஒப்புரவைக் கொணர்வதே கிறிஸ்தவ மறைப்பணி!

## -திருத்தந்தை அறிவுறுத்து

வத்திக்கான் : பிரிவினைகள் மற்றும், மோதல்களால் துன்புற்றுவரும் இன்றைய உலகிற்கு கடவுளின் ஒப்புரவைக் கொண்டுவரும் வண்ணம், கிறிஸ்தவ சபைகள் தங்களுக்கிடையே ஒன்றிப்பு மற்றும், ஒப்புரவு நிலவ உழைக்குமாறு, அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் அழைப்புவிடுத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

WCC எனப்படும் உலக கிறிஸ்தவ சபைகள் மன்றம், ஜெர்மனியின் Karlsruhe நகரில் ஆகஸ்ட் 31, கடந்த புதனன்று தொடங்கிய 11வது மாநாட்டிற்கு அனுப்பியுள்ள செய்தியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கடவுள் அனைத்து மக்களுக்கும் அழைப்புவிடுத்துள்ள ஒன்றிப்பில் காணக்கூடிய அடையாளமாக கிறிஸ்தவ சபைகள் இருந்துகொண்டு, உலகிற்கு ஒப்புரவை வழங்கவேண்டியது கிறிஸ்தவர்களாகிய நம் அனைவரின் மறைப்பணி என்பதை திருத்தந்தை வலியுறுத்தினார்.



செப்டம்பர் 08, கடந்த வியாழன் வரை நடைபெற்ற WCC மன்றத்தின் 11வது மாநாட்டில், கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் கர்ட் கோக் அவர்கள் தலைமையில் திருஅவையின் பிரதிநிதிகள் குழு ஒன்று பங்குபெற்றது. திருத்தந்தையின் இச்செய்தியை, கர்தினால் கோக் அவர்கள் அம்மாநாட்டில் வாசித்தார். WCC மன்றத்தின் மாநாடுகளில் பார்வையாளர்களாகப் பங்குபெறுவதற்கு, கத்தோலிக்கத் திருஅவை, 1901ஆம் ஆண்டிலிருந்து தன் பிரதிநிதிகளை அனுப்பி வருவதையும் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, அந்த மாநாட்டில் கத்தோலிக்கத் திருஅவையின் பிரதிநிதிகள் குழு பங்கேற்று வருவது, WCC மன்றத்திற்கும், கத்தோலிக்கச் திருஅவைக் கும் இடையே நிலவும் உறுதியான உறவின் அடையாளமாக உள்ளது எனவும் கூறியுள்ளார்.

“கிறிஸ்துவின் அன்பு, இவ்வுலகை ஒப்புரவு மற்றும் ஒன்றிப்புக்கு இட்டுச்செல்கிறது” என்ற தலைப்பில் இம்மாநாடு நடைபெற்றதை தன் செய்தியில் நினைவுகூர்ந்த திருத்தந்தை, இத்தலைப்பு, கிறிஸ்தவர்களுக்குள் ஒன்றிப்பு இன்னும் கூடுதலாக ஏற்படவும், உலகெங்கும் ஒப்புரவை ஊக்குவிப்பதற்கு கிறிஸ்தவர்கள் பணியாற்றவும் அழைப்புவிடுக்கின்றது என்று கூறியுள்ளார்.

### கிறிஸ்தவ ஒன்றிப்பு, மறைப்பணி

கிறிஸ்தவர்களுக்குள் ஒப்புரவு நிலவுவது, திருஅவையின் நம்பகமான மறைப்பணிக்கு அடிப்படையான முன்நிபந்தனை எனவும், கிறிஸ்தவ ஒன்றிப்பும், மறைப்பணியும் ஒன்றோடொன்று தொடர்புடையன எனவும் கூறியுள்ள திருத்தந்தை, தூய ஆவியாரின் வல்லமை மற்றும் ஒளியால், இவ்வுலகில் ஒப்புரவும் ஒன்றிப்பும் அதிகமாக ஏற்பட இம்மாநாடு உதவுவதற்குத் தான் செபிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




“நாம் பல்வேறு இனங்கள், சமயங்கள், கலாச்சாரங்கள் மற்றும் மொழிகளைச் சேர்ந்திருந்தாலும், மலேசியர்களாகிய நாம் நிம்மதியாக ஒன்றாக வாழக்கூடிய சூழல் மற்றும் பாதுகாப்பிற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

மலேசியர்கள் நமக்கிடையில் கருத்து வேறுபாடுகள் நிலவிய போதிலும், நமது பன்முகத்தன்மையை நேர்மறையான வழியில் நமது மலேசிய நாட்டின் ஆற்றலாகப் பார்க்க முடிகிறது. ஆகவே, நாம் கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பல இனங்கள், சமயங்கள் மற்றும் கலாச்சாரங்களைச் சேர்ந்த மலேசியர்களை ஒன்றிணைப்பதற்காக மலேசியப் பிரதமர் டத்தோ ஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் அவர்கள், “மலேசியக் குடும்பம் ஒருமைப்பாட்டில் வலிமை பெறுகிறது” என்ற பரப்புரையைத் தொடங்கியுள்ளோர். இதை நாம் பாராட்டுகிறோம்.


ஆயர் டத்தோ கொர்னேலியூ பியோங்

இந்த உன்னத இலட்சியத்தை நனவாக்க, மலேசியர்களாகிய நாம் அனைவரும் நமது சொந்த குடும்பத்திலிருந்தே இந்த உணர்வோடு பங்கேற்க வேண்டும், அக்கறை காட்ட வேண்டும். ஏனென்றால் குடும்பம் சமூகத்தின் அணு மற்றும் அடித்தளம் ஆகும். நம் குடும்பத்தில் தான் நல்ல அல்லது கெட்ட பழக்கங்கள் மற்றும் கலாச்சாரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஒரே மலேசிய குடும்பத்தைக் கட்டியெழுப்பு வதற்கு சமூக உணர்வு, பங்கேற்பு மற்றும் குடும்பத்தில் உள்ள போராட்டம் ஆகியவற்றில் திறந்த புரிந்துணர்வு தேவைப்படுகிறது. பெற்றோர்கள், இனம், சமயம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றைப் பெரிதுபடுத்தாமல், தங்கள் சக மனிதர்களை அவர்களின் இனம், மதம் மற்றும் கலாச்சாரத்தை மனதில் கொண்டு அனைத்தையும், கடவுளின் படைப்பாகக் கருதி, திறந்த மனதுடன் பழக குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் கடவுளின் அரசின் மற்றும் மலேசிய அரசாங்கத்தின் குடிமக்கள். நாம் எங்கிருந்தாலும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு தமது செல்வாக்கால், உப்பும் வெளிச்சமுமாக வாழ முற்படுவோம். (மத். 5:13-16).

இந்த உன்னத இலட்சியமான “மலேசியக் குடும்பம் ஒருமைப்பாட்டில் வலிமை பெறுகிறது ” என்பதை உணர நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

“மலேசியக் குடும்பம் ஒருமைப்பாட்டில் வலிமை பெறுகிறது ”

ஒருவருக்கொருவர் சொந்தம் கொண்டாடுவதில் மகிழ்ச்சி நிரம்பியுள்ளது’

Bishop Datuk Cornelius Piong

7 செப்டம்பர் 2022

# ஈப்போ, புனித மிக்கேல் பங்கில் கோலாகல குடும்ப தினம்!

**ஈப்போ:** இங்குள்ள புனித மிக்கேல் பங்கு (SMC) சமீபத்தில் பங்கு மக்களை மீண்டும், குறிப்பாக கோவிட் தொற்றின் போது பங்கை விட்டு விலகியிருந்தவர்களை தேவாலயத்திற்கு திரும்பக் கொண்டுவரும் நடவடிக்கைகளில் பரபரப்பாகச் செயல்பட்டது. இந்நோக்கத்திற்காக கடந்த ஆகஸ்ட் 31, 2022 அன்று இப்பங்கில் குடும்ப தினம் கொண்டாடப்பட்டது.



SMC FAMILY DAY - 31ST AUGUST 2022

நிகழ்வுக்கு முன், பணிக்குழுக்கள் மற்றும் அ.தி.ச குழுக்கள் ஆகியவற்றின் இளைஞர்கள், உள்ளூர் மற்றும் பங்கைச் சேர்ந்த வெளிநாட்டினர் அனைவரோடும் பங்கின் குடும்பத் தினத்தில் அனைவரது பங்களிப்பை உறுதிச் செய்ய பல கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்த ஏற்பாட்டின் உச்சக்கட்டமாக, பங்குத்தந்தை அந்தோணி லியூ அவர்கள் தலைமையில் நடைபெற்ற நன்றி திருப்பலியில் ஏராளமான இறைமக்கள் கலந்துகொண்டனர். அங்கு ஒருங்கிணைந்த பாடகர் குழு ஆங்கிலம், பஹாசா மலேசியா, மாண்டரின் மற்றும் லத்தீன் மொழிகளில் பாடல்களைப் பாடியது. அன்று தேவாலயத்தின் அருகாமையில் பொழுதுபோக்கு, உட்புற விளையாட்டுகள், குதிரை சவாரி மற்றும் உணவுக் கடைகள் என பல கேளிக்கை நடவடிக்கைள் பரபரப்பாகக் காணப்பட்டன. தொடர்ந்து, மூன்று மணி நேர இசை நிகழ்ச்சிகள் இந்த குடும்பத்தின கொண்டாட்டத்திற்கு மெருகூட்டியது.

உணவு சந்தைகளுக்குப் பொறுப்பேற்றவர்கள், அ.தி.ச. மற்றும் இதர பணிக்குழுக்கள் காலை 6 மணிக்கே ஆலய வளாகத்தில் கூடினர். வானிலை கூட சாதகமாக கடும் வெயிலின்றி மந்தமாக இருந்தது. நிறைவாக, தொற்றுக்குப் பின் நிகழ்ந்த இந்த ஒன்றுகூடலுக்கு அனைவரும் இறைவனுக்கு நன்றிஇ கூறினர்.

## பேராயர் அலுவலக அறிக்கை

கடந்த செப்டம்பர் 7-ம் திகதி, நாட்டின் சுகாதார அமைச்சர் மாண்புமிகு கைரி ஜமாலுடின் அவர்கள் உட்புற வளாகத்தில் முகக்கவரி அணிவது விருப்பமானது, ஆனால் வளாகத்தின் உரிமையாளர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது என்று அறிவிப்பு செய்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள், "நம்மைச் சுற்றி இன்னும் கோவிட்-19 நோய்த்தொற்றின் நேர்வுகள் உள்ளன என்பதையும், நோய்த்தொற்றுகளைத் தடுப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, ஆலயத்தில் வழிபாட்டு நேரங்களில், ஒன்றுகூடல்களில் **தொடர்ந்து முகக்கவரி அணிவது அவசியம்** என்று அறிவிதுள்ளார்.

FABC GENERAL CONFERENCE

Journeying Together as Peoples of Asia

# ஆசிய ஆயர்களின் பேரவைகளது கூட்டமைப்பு

## (Federation of Asian Bishops Conference, FABC)

## 50ம் ஆண்டு நிறைவு பொன் விழா

### கட்டுரை:ஆர்.கே.சாமி

#### முன்னுரை

திருஅவைக்குப் பணிக்கப்பட்ட நற்செய்தி அறிவிப்பு பணி பெந்தகோஸ்தே நாளன்று தொடங்கி கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இவ்வுலகில் நடைபெற்று வருகிறது. இது நம்பிக்கை அடிப்படையிலான வரலாற்றுப் பயணமாகும். இப்பயணம் தொடக்கத்தில் பலரின் இரத்தம் சிந்துதலாலும், உயிர்த்தியாகங்களாலும் தோற்றுவிக்கப் பட்டது என்றால் மிகையாகாது. இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகு உயிர்க்காக்க ஒதுங்கி, பதுங்கி இருந்த திருத்தூதர்கள் நாசரேத்தூர் இயேசுவிடமிருந்தும் அவரது ஏறக்குறைய மூன்றாண்டு வாழ்க்கை மற்றும் படிப்பினைகளிலிருந்தும் கற்றுக்கொண்ண்டவற்றை அவர் பணித்த வாறே தூய ஆவியாரின் அருள்பொழிவால் நிரப்பப்பெற்று, ஆங்காங்கே நம்பிக்கை சமூகங்களைக் கட்டியெழுப்பத் தொடங்கினர். இவ்வாறு முதலில் **மத்திய ஆசியாவில்** தடம் பதித்த திருஅவைதான் பின்னர் ஆசியாவெங்கும் பரவத்தொடங்கியது.

ஆசியாவில்தான் இறைவன் தனது மீட்புத் திட்டத்தை தொடக்கத்தில் வெளிப்படுத்தினார் என்றால் மிகையாகது. இன்று ஆசியா நாடுகளில் ஒன்றான ஈராக் என்றழைக்கப்படும் மெசப்பட்டோமியாவில் இருந்துதான் கடவுள் ஆபிரகாமை அழைத்தார். பின்னர் கடவுள் அவர் தேர்ந்தெடுத்த இஸ்ரயேலருக்கு வாக்களித்த நாடான கானானும் ஆசியாவில் தான் உள்ளது. இயேசு பிறந்த பெத்லகேமும், வளர்ந்த நாசரேத்தும், மரித்து உயிர்த்த எருசலேமும் இதே மேற்கு ஆசியாவில்தான் உள்ளது. திருத்தூதர் பவுல் அடிகளும் தனது நற்செய்திப் பணியை மேற்கு ஆசியா பகுதிகளில் தான் தொடங்கினார். பின்னர், முதல் நூற்றாண்டிலேயே திருத்தூதர்களில் ஒருவரான தோமா இந்தியா துணைக் கண்டத்திற்கும் வந்து நற்செய்தி அறிவிக்கலானார் என்பது வரலாறு. மேற்கு ஆசியாவில் தொடக்க காலக் கிறித்தவ மையங்களாக அமைந்தவை எருசலேம், அந்தியோக்கியா போன்ற நகரங்கள் ஆகும். இவ்வாறு, ஆசியாவில் தான் கடவுளின் மீட்டுப்பணியும், இயேசுவின் அன்பு பணியும் முதலில் வேரூன்றியது என்பதை வரலாறு மெய்ப்பிக்கின்றது.

#### ஆசியா திருஅவை

திருஅவையைத் தோற்றுவித்த தூய ஆவியார் ஆசியாவை கைவிடவில்லை. யூத சமயம், இந்து, பௌத்தம், ஷிந்தோ (ஜப்பானியர் சமயம்), தாவோயிசம், கான்பூசியனிசம், இஸ்லாம் போன்ற பெரும் சமயங்களின் பிறப்பிடமாக விளங்கும் ஆசியா, சமயங்களுக்கு மட்டுமல்ல பல இனங்கள், பண்பாடுகள், மொழிகள் போன்றவற்றிக்கும் பிறப்பிடமாக விளங்குகிறது. இவற்றிக்கு மத்தியில் அனைவருக்கும் உரியதுமாக பன்முகத் தனமையில் திருஅவையை வழிநடத்தி வருகிறார் தூய ஆவியார். தூய ஆவியாரின் தூண்டுதலுக்குப் பணிந்து, தனது மறைத்தூதுப் பணியைத் துணிவோடும், நேர்மையோடும் திருஅவை இயேசு மூட்டிய தீயை இக்கண்டத்தில் அணையாது காத்து வருகிறது. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியில் இருக்கும் ஆர்மீனியா (கிபி 301ல்) மற்றம் ஜோர்ஜியா நாடு (கிபி 327ல்) கிறித்தவத்தைத் தம் நாட்டு மதமாக அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டன.

கிறித்தவ சமயம் ஆசியக் கண்டத்தில், அதுவும் குறிப்பாக மேற்கு ஆசியாவில் தோன்றி, "என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது (தி.ப.4:20) என்று பயணித்த இயேசுவின் சீடர்களின் தூதுரைப்பணி வழியாக ஆசியா முழுவதும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாகப் பரவியது. இவ்வகையில், உலகின் மீட்பராகிய இயேசு கிறிஸ்து ஓர் ஆசியர், ஆசிய கண்டத்தில் பிறந்தவர், வளர்ந்தவர். ஆகவே மீட்பின் கருவியாம் திருஅவை ஆசியாவுக்கு அன்னியது அல்ல.

தொடரும்..

# கடவுளுக்குப்பணி நம் பணியாகட்டும் !

இரு தலைவர்கட்குப் பணிவிடை செய்பவர்கள் யார்க்கும் உண்மையாக இருப்பதில்லை என்பதை சிந்திக்க இன்றைய பொதுக்காலம் 25ஆம் ஞாயிறு நம்மை அழைக்கின்றது. இன்றைய நற்செய்தி வாசகம் சற்றுக் குழப்பமாகத் தோன்றலாம். உலகப் போக்கில் நேர்மையற்ற முறையில் வாழ இயேசு நம்மை ஊக்குவிப்பதாக தோன்றும். ஏனெனில் தலைவரின் கஜானாவைப் பாதுகாத்து, பணத்தை வட்டிக்குக் கொடுத்தோ, முதலீடு செய்தோ பெருக்கும் கடமையைக் கொண்ட வீட்டுப் பொறுப்பாளரின் கீழறுப்பு வேலையை ஆதரிப்பதாகத் தோன்றுகிறது இன்றைய நற்செய்தி. தன்னுடைய கள்ளத்தனம் வெளிப்படபோக்கும் தருவாயில் வீட்டுப் பொறுப்பாளர், மிகவும் சாதுர்யமாகச் செயல்பட்டார்.

கடன் வாங்கியவர்களை அழைத்து, கடன் பத்திரத்தில் வாங்கிய தொகையை விட குறைவாக எழுதச் சொன்னார், வீட்டுப் பொறுப்பாளர். மற்றவர்கள் மீது தாம் காட்டும் இந்த கனிவான நடவடிக்கையினால், இந்த வேலையில் இல்லாத போது அவர்கள் தம்மை அலட்சியப் படுத்தாமல் கனிவாக நடத்துவார்கள் என வீட்டுப் பொறுப்பாளர் திட்டமிட்டார். இவரின் குறுக்குப் புத்தியைக் கண்டு வீட்டுத் தலைவர் கோபப்படவில்லை, மாறாக அந்த வீட்டுப் பொறுப்பாளரைப் பாராட்டினார். இதனால் நேர்மையற்ற வீட்டுப் பொறுப்பாளர் மனம் மாறி, பணம் சம்பாதிப்பது மட்டும் முக்கியம் அல்ல என்பதை உணர்ந்தார்.

இன்றைய நற்செய்தியின் இறுதியில், "நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது" என இயேசு சுட்டிக்காட்டுகிறார். செல்வத்திற்குப் பணிவிடை செய்துவிட்டு விரைவில் அழிவைச் சந்தித்தவர்கட்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டு, இயேசுவின் சீடர்களுள் ஒருவனான யூதாஸ் இஸ்காரியோத்து. செல்வத்தைச் சேகரிப்பதிலேயே குறியாக இருந்தால், கடவுள் மீதான கவனம் தவறி விடும். "வெள்ளிக்காசுக்கு ஏழைகளையும், இரு காலணிக்கு வறியோரையும் வாங்கலாம்" (ஆமோஸ் 8:6) என்ற எண்ணத்தில் பணத்தைச் சம்பாதிப் பதிலேயே குறியாக இருந்தால், அந்த எண்ணத்தைக் கைவிடுமாறு முதல் வாசகம் நமக்கு அறைகூவல் விடுக்கிது.

'காசேதான் கடவுள்' என்ற போதையில் கடன் திருநாளான ஞாயிற்றுக்கிழமையிலும் சம்பாதிப்பதில் மட்டும் குறியாக இருந்தால், "அவர்களுடைய இந்தச் செயல்களுள் ஒன்றையேனும் நான் (கடவுள்) ஒருபோதும் மறக்கமாட்டேன்" என இறைவாக்கினர் ஆமோஸ் வழியாக கடவுள் எச்சரிக்கை விடுக்கிறார். நற்செய்தியில் வரும் வீட்டுப் பொறுப்பாளர் போல் தன்னிலை உணர்ந்து மனம் மாறுவோம். நம்மைச் சுற்றியுள்ள உலகத்தில், சின்னஞ்சிறியவர்களிடையே குணமளிப்பையும் மன்னிப்பையும் விதைப் போம் 'நானே உன் கடவுளாகிய ஆண்டவர்; என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது' (விப 20: 2-3) என்பார் கடவுள். நாம் இஸ்ரயேல் மக்களைப் போன்று கடவுளுக்கும் சாத்தானுக்கும் அல்லது கடவுளுக்கும் செல்வத்திற்கும் பணிவிடை செய்து வாழ்கின்றோம் என்றால், நாம் யாருக்கும் உண்மையாக இல்லை என்பதுதான் உண்மை.

ஆகையால், நம்முடைய வாழ்விற்கு வளம் சேர்க்கும் உண்மைக் கடவுளுக்கு ஊழியம் புரிவோம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

*அந்தோணி இன்னாசி*
*ஸ்ரீ கெம்பாஙான், சிலாங்கூர்*

**ஆண்டின் பொதுக்காலம் 25-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | ஆமோஸ் 8:4-7 |
| தி. பாடல்: | 113: 1-2. 4-6. 7-8 |
| 2ம் வாசகம்: | 1திமொ 2: 1-8. |
| நற்செய்தி: | லூக்கா 16: 1-13 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**